யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூலை - 2015

FWC

# Term Examination, July - 2015

| தரம் :- 12 (2016) | தொடர்பாடல் ஊடகக்கற்கை | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

❖ 01 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து, அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (✕) இடுவதன் மூலம் காட்டுக.

1. 'பர்கி' குறிப்பிடும் சுய எண்ணக்கரு பற்றிய வரைவிலக்கணத்தில் உள்ளடங்கும் கூறுகள்
   (1) நம்பிக்கை, தோற்றம், தேர்ச்சிகள்
   (2) நம்பிக்கை, ஆற்றல், தோற்றம்
   (3) சமூக அங்கீகாரம், தோற்றம், நம்பிக்கை
   (4) ஆற்றல்கள், தேர்ச்சிகள், தோற்றம், சமூக அங்கீகாரம்
   (5) பெறுமானங்கள், நம்பிக்கை

2. பொதுசனத் தொடர்பின் மூலம் உருவாகும் விளைவு அல்லாதது
   (1) நிறுவனம் தொடர்பில் பிரச்சாரம் மற்றும் பிரபல்யம் ஏற்படுதல்
   (2) நிறுவனம் தொடர்பில் மீள் உருவாக்க பிம்பத்தைக் கட்டியெழுப்பல்
   (3) நிறுவனம் தொடர்பில் எதிர்மறை பிம்பத்தை நீக்குதல்
   (4) நிறுவனத்திற்கும் மக்களுக்கும் இடையில் இருவழித் தொடர்பு உருவாதல்
   (5) நிறுவனத்தின் மீதான நன்மதிப்பை (Goodwill) உயர்த்துதல்

3. தொடர்பாடல் செயன்முறையின் விளைவை, வெற்றி தோல்வியை அறிதற்கு உதவும் தொடர்பாடல் கூறு
   (1) மீளவலியுறுத்தல் (2) பின்னூட்டல்
   (3) ஊடகம் (4) குறிமுறையவிழ்ப்பு
   (5) உச்சஸ்தானம்

4. உலகமயமாதலின் விளைவு அல்லாதது
   (1) புகழ் கலாசார உருவாக்கம்
   (2) சுதேச கலாசார உருவாக்கம்
   (3) ஊடக கலாசாரம் உருவாக்கம்
   (4) சந்தைப்படுத்தல் கலாசார உருவாக்கம்
   (5) மேலைமய கலாசார உருவாக்கம்

5. தூண்டல் - துலங்கல் (Stimulus – Response) செயன்முறை ஊடாகக் கற்றல் இடம்பெறுகின்றது என்பதை முன்வைத்தவர்
   (1) பவ்லோவ் (2) ஸ்கின்னர் (3) தோண்டைக்
   (4) ரோல்மன் (5) கொவ்வா

6. முறைசாராத் தொடர்பாடலின் போது குறித்த தகவல் ஒன்று திரிபுபடுவதற்கான காரணியாக அமையாதது
   (1) குறித்த சூழ்நிலையைத் தமக்கு சாதகமானதாக மாற்றுதல்
   (2) தவறினை வேறொருவர் மீது சுமத்துதற்கு
   (3) கிரகித்தல் சார்ந்த பலவீனங்கள்

(4) தனிப்பட்ட நோக்கத்தில் வெற்றியடைவதற்கு
(5) செவிமடுத்தல் ஆற்றலின் சாதகமான நிலைமைகள்

7. வகுப்பறையில் மாணவர்களுக்கு இடையில் ஊடகக் கலாசாரமும் சமூகமாற்றமும் தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அமல் : ஊடக கலாசார பரவலாக்கத்தின் நிமிர்த்தம் உருவாகும் சமூக மாற்றத்தினால் கலாசாரமோதல் ஏற்படுகின்றது.

நிமல் : ஊடக கலாசார பின்னணியிலான சமூகமாற்றம் வர்த்தக மயப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டமைந்தது.

விசாகன் : ஊடக கலாசார பின்னணியிலான சமூகமாற்றம் கலாசார மாற்றத்திற்கு வித்திட்டுள்ளது.

கமல் : ஊடக கலாசார பரவலாக்கம் கலாசார உறுதுணைக்கு முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளது.

மேற்படி கூற்றுக்களில் ஊடகலாசாரம் - சமூகமாற்றம் தொடர்பில் பொருத்தமானதாக அமைவன
(1) அமல் மற்றும் விசாகன் கூற்றுக்கள்
(2) அமல் மற்றும் நிமல் கூற்றுக்கள்
(3) நிமல் மற்றும் கமல் கூற்றுக்கள்
(4) அமல், விசாகன் மற்றும் கமல் கூற்றுக்கள்
(5) நிமல், விசாகன் மற்றும் கமல் கூற்றுக்கள்

8. பொதுசனதொடர்பு நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடுதலில் வெளியகக் குழுவைப் பயன்படுத்தி திட்டம் தொடர்பிலான நடைமுறைச் சாத்தியம் பற்றி கணிப்பிடுதல் பின்வருமாறு அழைக்கப்படும்
(1) முன்மதிப்பீடு
(2) திட்டமிடல்
(3) முறைகளும் நுட்பங்களும்
(4) நிலைமைப் பகுப்பாய்வு
(5) இலக்குகளை வரையறை செய்தல்

9. ஊடகவியல் மாநாடு ஒன்றினை ஒழுங்கமைக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய காரணியாக அமையாதது
(1) சமகால செய்திகளாக அமைதல்
(2) தகவலை ஊடகவியலாளருக்கு வழங்குவதை முதன்மைப்படுத்தல்
(3) நேரமுகாமைத்தும் பேணல்
(4) வினாக்களை கேட்பதற்கான சந்தர்ப்பம்
(5) ஊடக அறிக்கையை வெளியிடுதல்

10. “ஒத்துணர்வு” நிலைமையை வெளிப்படுத்துவது
(1) பேசுபவரின் நிலையில் தன்னை இருத்தி அனுதாபத்தை வெளிப்படுத்தல்
(2) கூறப்படும் விடயங்களைப் புத்தாக்க ரீதியாக எதிர்கொள்ளல்
(3) பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அணுகுமுறையை ஊக்குவித்தல்
(4) கேட்பவர் அவதானம் முழுமையாகச் சொல்பவர் பக்கம் திரும்பி இருத்தல்
(5) விடயத்தைத் தெளிவாகத் தெரியும் வண்ணம் மீள உருவகித்தல்.

11. நாம் பெறும் தகவல்கள் புலன்களின் வழியாக முதலில் சென்றடையும் கட்டம் ஞாபக மாதிரியில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது
(1) பயிற்சிக் கட்டம்
(2) நீண்டகால ஞாபகக் கட்டம்
(3) குறுகியகால ஞாபகக் கட்டம்
(4) மறத்தல் கட்டம்
(5) புலன்வழி தகவல் பெறல் கட்டம்

12. சமூகக் கட்டமைப்பில் காணப்படும் முறைசார் கட்டமைப்புக்களாக அமைவன
(1) பாடசாலை, சமூக நிறுவனம்
(2) குடும்பம், பாடசாலை
(3) சமவயதுக்குழு, பாடசாலை
(4) கழகம், குடும்பம்
(5) குடும்பம், சமூக நிறுவனம்

13. "பிரசைகள் ஊடகவியல்" போக்கு தொடர்புபட்டமையும் தொடர்பாடல் எண்ணக்கரு
(1) அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு
(2) ஜனநாயக தொடர்பாடல் எண்ணக்கரு
(3) சமூக பொறுப்பு தொடர்பாடல் எண்ணக்கரு
(4) பொதுவுடைமை தொடர்பாடல் எண்ணக்கரு
(5) அதிகாரவாத தொடர்பாடல் எண்ணக்கரு

14. அறிவுத் தேடலுக்கான நுட்பமுறையாக அமையாதது
(1) கருத்துருவாக்கம்
(2) அவதானிப்பு
(3) பரிசோதனை
(4) உற்றுநோக்கல்
(5) பகுப்பாய்வு

15. பின்வருவனவற்றுள் மொழிசார் திருத்தம் தேவையற்ற வாக்கியம்
(1) கொழும்பிலுள்ள கடைகளில் நேற்றுக்காலை தீ விபத்து ஏற்பட்டன.
(2) போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்கு மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டது.
(3) நேற்றும் இன்றும் நாளையும் கடும் காற்றுடன் மழை பெய்யும்.
(4) தொழிலாளர் கட்சி இம்முறை மேதின கூட்டத்தைக் கண்டியில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.
(5) மாட்டிறைச்சி சாப்பிடுவதிலிருந்து முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

16. வாய்மொழி மூலம் பிறரை ஈர்க்கும் வகையில் கருத்துக்களை வெளிப்படுத்தல் மற்றும் தகவல் ஒன்றினை பரிமாறுதல் முறையே பின்வருமாறு அழைக்கப்படும்
(1) உரை, பேச்சு
(2) படைப்புத்திறன், பேசுதல்
(3) பேச்சுத்திறன், பேசுதல்
(4) பேசுதல், பேச்சுத்திறன்
(5) உரையாடல், உரையாடல் திறன்

17. பிரதேசத்தில் தொழில் செய்யும் தொழிலாளர்களான மீனவர், விவசாயிகள் தமக்கிடையே பயன்படுத்துகின்ற மொழி பின்வருமாறு அழைக்கப்படும்
(1) பிரதானமொழி
(2) பிரதேச மொழி
(3) கிளைமொழி
(4) கலப்பு மொழி
(5) வாழும் மொழி

18. தகவல் - சமூகம் தொடர்பிலான தவறான கூற்று
(1) முறைசார் தகவல் சமூக விருத்திக்கு உதவும், முறைசாரா தகவல்கள் சமூக முரண்பாட்டை உருவாக்கும்.
(2) சமூகத்திற்குத் தகவல்கள் கிடைப்பது பிரதானமாக வெகுசன ஊடகங்கள் மூலம் ஆகும்.
(3) சமூக இயங்கு தன்மைக்கு தகவல் மிக அடிப்படையானது.

(4) முறைசார் வழி மூலம் மட்டும் சமூகத்திற்குத் தகவல் கிடைக்கின்றன.
(5) முறைசார், முறைசாரா வழிமுறைகள் ஊடாகச் சமூகத்திற்குத் தகவல் கிடைக்கின்றன.

19. குறித்த தகவல் ஊடகம் வழியாக குறித்த இலக்கைச் சென்றடைதல் ஷெனோன் மற்றும் வீபர் மாதிரியில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.
(1) உச்சஸ்தானம்
(2) கடத்தல்
(3) பெறுகை
(4) சமிக்ஞை
(5) தகவல் மூலாதாரம்

20. காலனித்துவம், நவகாலனித்துவம் ஊடாக ஏற்பட்ட கலாசார செல்வாக்கு பின்வருமாறு அழைக்கப்படும்
(1) கலாசார ஆக்கிரமிப்பு (2) கலாசார அதிர்வு (3) கலாசார பரிமாற்றம்
(4) கலாசார திணிப்பு (5) கலாசார உறுதுணை

21. A - வார்த்தைகளை மீளப்பெற முடியாது.
B - முன்னாயத்தம் பயனுடையது.
C - நேர்மய கருத்துக்களை வெளிப்படுத்தல்
D - இருவரும் குறித்த மொழியை அறிந்திருக்க வேண்டும்.
E - மீண்டும் மீண்டும் பயன்படுத்த முடியாது
மேற்படி கூற்றுக்களில் வாய்மொழித் தொடர்பாடல் வடிவத்தைப் பிரதிபலிப்பன
(1) கூற்று A உம் C உம்
(2) கூற்று B உம் C உம் D உம்
(3) கூற்று A உம் C உம் E உம்
(4) கூற்று B உம் D உம் E உம்
(5) கூற்று A உம் B உம் C உம் D உம்

22. பின்வருவனவற்றுள் உள்ளகத் தொடர்பாடல் செயலொழுங்கிற்கு எடுத்துக்காட்டுக்களாக அமைவன.
(1) சுய எண்ணக்கரு, தீர்மானம் எடுத்தல், ஞாபகம், கற்றல், சிந்தித்தல்
(2) ஒத்துணர்வு, செவிமடுத்தல், வகைகூறல், ஞாபகம், கற்றல்
(3) கற்றல், தீர்மானம் எடுத்தல், ஞாபகம், சுய எண்ணக்கரு, ஒத்துணர்வு
(4) செவிமடுத்தல், தீர்மானம் எடுத்தல், ஞாபகம், கற்றல், சிந்தித்தல்
(5) சுய எண்ணக்கரு, ஒத்துணர்வு, செவிமடுத்தல், ஞாபகம், சிந்தித்தல்

23. A : உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எண்ணங்களையும் நடத்தைகளையும் கட்டுப்படுத்தலாம்.
B : உணர்வுகள், எண்ணங்களைப் பயிற்சி மூலம் கட்டுப்படுத்தலாம்.
C : உணர்வுகள், எண்ணங்களைப் பயிற்சி மூலம் கட்டுப்படுத்த முடியாது.
D : உணர்ச்சிவயப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மனதைக் கட்டுப்படுத்தல் இலகுவான செயன்முறை
E : மனக்கட்டுப்பாட்டு செயன்முறைக்கும் நுண்ணறிவுக்கும் தொடர்பின்மை நிலவுகின்றது.
F : உள்ளகத் தொடர்பாடலைக் கட்டுப்படுத்த மனக்கட்டுப்பாடு அடிப்படை செயன்முறையாகும்.
மேற்படி கூற்றுக்களில் மனக்கட்டுப்பாட்டு வழிமுறைக்கான செயன்முறையுடன் தொடர்புபட்டமைவன
(1) கூற்றுக்கள் A உம் B உம் F உம்
(2) கூற்றுக்கள் A உம் C உம் E உம்
(3) கூற்றுக்கள் B உம் D உம் F உம்
(4) கூற்றுக்கள் A உம் C உம் E உம்
(5) கூற்றுக்கள் D உம் E உம் F உம்

24. பயனுள்ள பேச்சுக்கான நிலைமையாகக் கொள்ள முடியாதது

(1) குறித்த நோக்கில் பேச்சு அமைதல்
(2) உணர்வுபூர்வமான நிலைமையில் பேச்சு அமைதல்
(3) உணர்ச்சி வசப்படாத தன்மையில் பேச்சு அமைதல்
(4) பெறுநர்களை விளங்கி அதற்கு ஏற்ப பேச்சு அமைதல்
(5) நேரமுகாமையை கருத்தில் கொண்டு பேச்சு அமைதல்

25. பின்வருவனவற்றுள் செய்தியின் இயல்புடன் தொடர்பற்றது
(1) செய்தி பெறுபவர் அதற்கான துலங்கலை வெளிப்படுத்துவர்
(2) செய்தியைக் கடத்துவது அலைவரிசையாகும்.
(3) செய்தி மூலத்தில் இருந்து செய்திக்கான தகவல் பெறப்படும்.
(4) செய்திக்கான துலங்கல்கள் பின்னூட்டலாக அமையும்
(5) செய்தியை உருவாக்குபவரால் துலங்கல் வெளிப்படுத்தப்படும்.

## பகுதி – II

- **ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**
- **ஓவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.**

1) ‘‘இயங்கும் சமூகம் ஒன்றின் பெறுபேறு கலாசாரம்’’

i) ‘‘கலாசாரம்’’ எண்ணக்கருவில் உள்ளடங்குகின்ற நான்கு கூறுகளைப் பெயரிடுக.

ii) சமூகம் ஒன்றின் கலாசார உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கைப் பெயரிடுக.

iii) ஊடக கலாசாரத்தின் மூலம் கிடைக்க கூடிய நேர்மய விளைவுகளை மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

iv) ஊடக விளம்பர செயன்முறையின் நேர்மயமான, எதிர்மயமான விளைவுகளை இரண்டு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

2) ‘‘நிறுவனம் ஒன்றின் சமூக இருப்புக்கு பொதுசனத்தொடர்பு அடிப்படையானது’’

i) இந்திய மக்கள் தொடர்பு நிறுவனம் சுட்டிக்காட்டும் பொதுசனத்தொடர்பின் இரு முதன்மை இலக்குகளைப் பெயரிடுக.

ii) பொதுசனத் தொடர்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கான வடிவம், உத்தி ஆகியவற்றிற்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடுக.

iii) வங்கி ஒன்று பொதுசனத் தொடர்பை நீண்டகால அடிப்படையில் உருவாக்கும் வகையில் அனுசரணை வழங்க கூடிய மூன்று செயற்திட்டங்களை குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக.

iv) நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகின்ற ஊடகதொடர்பு அலுவலகரின் கடமைகளை நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

3) ‘‘ஒரு இனத்தின் தனித்துவ அடையாளமாக மொழி விளங்குகின்றது’’

i) முதல்முதலாக பலமொழி பயன்படுத்தப்பட்ட வெகுசன ஊடக வகையைப் பெயரிடுக.

ii) தொலைக்காட்சி ஊடக மொழிப் பயன்பாட்டில் அவதானிக்கப்படக்கூடிய இரு அம்சங்களைக் குறிப்பிடுக.

iii) துணை கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி அடைகின்ற மொழி அழைக்கப்படும் விதத்தைப் பெயரிட்டு, அம் மொழியில் அவதானிக்கப்படக்கூடிய தனித்துவமான இயல்புகளை மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

iv) பூகோள கலாசார செல்வாக்கினால் நவீன ஊடகங்களில் அவதானிக்கப்படக்கூடிய மொழியின் பயன்பாட்டு நிலமைகளை நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

4) "சமூக மாற்றங்களை உருவாக்கும் முகவராக வெகுசன ஊடகங்கள் விளக்குகின்றன"

i) வெகுசன ஊடகங்களில் தணிக்கை செயன்முறையை அறிமுகம் செய்த தொடர்பாடல் எண்ணக்கருவைப் பெயரிடுக.

ii) தராண்மைவாத அரசில் அவதானிக்கப்படக்கூடிய ஊடக செயற்பாடு தொடர்பிலான இரு இயல்புகளைக் குறிப்பிடுக.

iii) உலகமயமாக்கல் மற்றும் பூகோளமயமாக்கல் பின்னணியில் அறிமுகமாகிய வெகுசன தொடர்பாடல் போக்குகள் மூன்றினைப் பெயரிட்டு, சுருக்கமாக விளக்குக.

iv) சமூகமயமாக்கல் செயன்முறை இன்மையினால் ஏற்படக்கூடிய விளைவுகளை நான்கு அம்சங்களை அடிப்டையாகக் கொண்டு விபரிக்குக.

5) "தொடர்பாடல் செயன்முறையின் வினைத்திறனை விளைதிறன் தீர்மானிப்பவையாக தொடர்பாடல் கூறுகள் காணப்படுகின்றன.

i) டெங்கு நோய் பரவுதல் தொடர்பிலான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்றில் நோய் தொடர்பிலான விழிப்புணர்வு கருத்தினை சுகாதார அதிகாரி முன்வைத்தார்"

மேற்படி தொடர்பாடல் செயன்முறையில் அவதானிக்கப்படக்கூடிய தொடர்பாடல் கூறுகளை சம்பவத்துடன் தொடர்புபடுத்திப் பெயரிடுக.

ii) மேற்படி கருத்தரங்கில் கருத்துக்களை மாணவர்கள் முழுமையாக பெற்றுக்கொண்டனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய நான்கு பின்னூட்டல் வழிமுறைகளைக் குறிப்பிடுக.

iii) கருத்தரங்கில் பிரதான ஊடகமாக மொழி பயன்படுத்தப்பட்டிருப்பின் மொழி சார்பாக ஏற்படக்கூடிய இடையூறுகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

iv) பயனுள்ள பேச்சில் அவதானிக்கப்படக்கூடிய நான்கு அம்சங்களைக் குறிப்பிட்டு விபரிக்குக.

6) i) ஒருவரிடம் பிரச்சினை ஒன்றினை தீர்ப்பதற்குத் தேவையாக காணப்படக் கூடிய அடிப்படை ஆற்றலைப் பெயரிடுக.

ii) சுய எண்ணக்கரு உருவாக்கத்தினால் கிடைக்கக்கூடிய இரு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

iii) ஆளிடைத்தொடர்பு வெற்றிபெறுவதற்கு ஒத்துணர்வு பயன்படும் விதத்தை மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

iv) "கலந்துரையாடல் செயன்முறைக்கு கூட்டுத் தொடர்பாடல் திறன் அவசியம்"

கலந்துரையாடல் மூலம் கிடைக்ககூடிய அனுகூலங்களை நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

7) i) செய்தி ஒன்றிற்கான தகவல் கிடைக்கும் வழிமுறை எவ்வாறு அழைக்கப்படும்?

ii) மரபுரீதியான, நவீன முறையில் கட்புல தொடர்பு இடம்பெறுவதற்கான எடுத்துக்காட்டுக்கள் நான்கினை முறையே குறிப்பிடுக.

iii) முறைசார் குழுக்களினால் கட்டியெழுப்பக்கூடிய சமூகதொடர்பாடல் திறன்களை மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

iv) நிறுவனம் ஒன்றில் முறைமைசாரா குழுக்கள் தோன்றுவதற்கு ஏதுவாக அமையக்கூடிய சந்தர்ப்பங்களை நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.